FIRST INFORMATION REPORT

Under Section 173 BNSS முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C)
(குறியீடுபிரிவு 154 இன்கீழ்)

C 8167204

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

1. District : Ranipet — Visilance & Anti-corruption — Year: 2026 — FIR No.: 4/2026 — Date: 6.7.2026
   மாவட்டம் — காவல்நிலையம் — ஆண்டு — முத.அ. எண் — நாள்

2. (i) Act சட்டம்: The prevention of Corruption — Sections பிரிவுகள்: U/s 7(a), 12 r/w 7(a)
   (ii) Act சட்டம்: (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: U/s 106 BNSS
   (iii) Act சட்டம்: BNSS — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : — Date from : 03.07.2026 — Date to : —
   குற்ற நிகழ்வு நாள் — நாள் முதல் — நாள் வரை

   Time Period : — Time from : — Time to : prior to 16.00 hrs
   நேர அளவு — நேரம் முதல் — நேரம் வரை

   (b) Information Received at PS. Date : 06.07.2026 — Time : 15.00 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) Volume-II 2026 — Time : 06.07.2026 @ 15.00 hrs and 16.30 hrs
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — நேரம்

4. Type of Information : Written/ Oral : - written
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: — Municipality office, Walajapet, Ranipet District about 5 Kms East
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : — (b) Address : —
   முறைக் காவல் எண் — முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : D. Jegadeeswaran — (b) Father's/ Husband's Name : Duraisamy
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : 51 — (d) Nationality : Indian — (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு — நாட்டினம் — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : — Place of Issue : —
   வழங்கப்பட்ட நாள் — வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : Deputy ICO — (g) Address : Inspection Cell office, Vellore Ranipet Tirupathur and Tiruvannamalai Districts Collectorate, Vellore.
   தொழில் — முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. Tmt. E. Geetha (44/2026), Municipal Engineer, Walajapet Municipality
   2. Tr. P. Venkatesan (43/2026), Revenue Inspector, Walajapet Municipality
   3. Tr. G. Karthikeyan (27/2026), Technical Assistant (Temporary), Sri Ganapathy self Help Group, Walajapet Municipality, Ranipet District

8. Reasons for delay in reporting by the complainant / Informant: —
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
6/7/26 @ 18.30hrs

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
6/7/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. Vijayalakshmi,
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police,
Vigilance & Anti-corruption,
Ranipet

Attachment in Column No. 12 of FIR in Ranipet V&A Cr.No. 04/2026 u/s 7(a), 12 r/w 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 and u/s 106 BNSS

பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது. இன்று 06.07.2026-ஆம் தேதி சுமார் 15.00 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.D.ஜெகதீஸ்வரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு:- நாள்: 06.07.2026 அனுப்புநர் D.ஜெகதீஸ்வரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை அம்மையீர், பொருள் இராணிப்பேட்டை மாவட்டம் - இருதுறை திடீர் கூட்டு சோதனை – வாலாஜாப்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் கடந்த 03.07.2026 அன்று மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு சோதனை சம்மந்தமான புகார் சமர்ப்பித்தல் - தொடர்பாக. கடந்த 03.07.2026 ஆம் தேதி பகல் சுமார் 14.30 மணிக்கு, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களின் மாவட்ட ஆய்வுக்குழுவின் துணை ஆய்வுக்குழு அலுவலர் D.ஜெகதீஸ்வரன் ஆகிய எனக்கு இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாப்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் பிறப்பு இறப்பு சான்றிதழ், புதிய குடிநீர் இணைப்பு, மனைப்பிரிவு ஒப்புதல், கட்டிட அனுமதி, சொத்து வரி வசூல் ஆகியவற்றிற்காக நகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொது மக்களிடம் இருந்து அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக வாலாஜாப்பேட்டை நகராட்சி அலுவலக ஊழியர்கள் அவரவர் பதவிக்கு ஏற்பவும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காகவும், பொது மக்களிடமிருந்து நேரடியாகவும், வங்கி கணக்கு மூலமாகவும் கையூட்டாக பணம் பெறுவதாக தகவல் கிடைக்கப்பெற்றது. மேற்படி தகவலை நான் என்னுடைய தகவலர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய தங்களுக்கு பகல் சுமார் 15.30 மணியளவில் தகவல் தெரிவித்து, சுமார் 15.45 மணிக்கு அலுவலகத்தில் இருந்து குழுவினருடன் புறப்பட்டு, வாலாஜாப்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் இருதுறை திடீர் கூட்டுச்சோதனை மேற்கொள்ள மாலை 16.00 மணிக்கு சென்று சேரப்பட்டது. இருதுறை திடீர் கூட்டுசோதனைக்குழுவினராகிய நாங்கள், அலுவலகத்தின் மேற்கு திசையில் உள்ள நகராட்சி ஆணையர் அறையை பார்க்க, அங்கு நகராட்சி ஆணையர் இல்லாததால், அங்கிருந்த மற்ற அலுவலர்களிடமும் என்னையும், தங்களையும், குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டு, அடையாள அட்டையை காண்பித்து, நகராட்சி அலுவலகத்திற்கு சோதனைக்கு வந்துள்ள நோக்கம் தெரிவிக்கப்பட்டது. பின்னர்,

இருதுறை திடீர் கூட்டுச்சோதனைக்கு வந்த அலுவலர்களை நம்மை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டு எந்த பணமும் இல்லை என்பதை உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர், அங்கிருந்த அலுவலர்களிடம் நகராட்சி ஆணையர் எங்கே என விசாரிக்க, அதற்கு அவர்கள் வாலாஜாப்பேட்டை நகராட்சி ஆணையர் திருமதி.மேகலா அவர்கள் மேல்விஷாரம் நகராட்சி ஆணையர் பொறுப்பையும் கூடுதலாக கவனித்து வருவதாகவும், அங்கு 03.07.2026 அன்று நகரசபைக்கூட்டம் நடைபெறுவதால் மதியம் சுமார் 13.30 மணியளவில் வாலாஜாப்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் இருந்து அவரும், நகராட்சி பொறியாளர் திருமதி.கீதா அவர்களும் புறப்பட்டு போனார்கள் என்று தெரிவித்தார்கள். பின்னர், அலுவலகத்தின் அடுத்த நிலை அலுவலர் யாரென்று கேட்க, அதற்கு அவர்கள் நகராட்சி வருவாய் ஆய்வாளர் பொறுப்பு: கணக்காளர் திரு.வெங்கடேசன் அவர்கள் மதிய உணவிற்காக வெளியில் சென்றிருப்பதாக சொன்னார்கள். பின்னர், மேற்படி நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர்களுக்கு தகவல் சொல்லி, வாலாஜாப்பேட்டை நகராட்சி அலுவலகத்திற்கு உடனே வரும்படி தகவல் சொல்லப்பட்டது. பின்னர், அங்கிருந்த அலுவலர்கள் முன்பு அலுவலகத்தின் நகராட்சி ஆணையரின் அறையை ஒட்டியுள்ள முதல் அறை, வருவாய் ஆய்வாளர் / கணக்காளர் அறையில் இருந்த மேஜை இழுவறைகள் மற்றும் பீரோக்கள் ஆகியவற்றை சோதனை செய்ய பணம் ஏதும் இல்லை. பின்னர், நகராட்சி வருவாய் ஆய்வாளர் திரு.வெங்கடேசன் மதிய உணவிற்காக வெளியில் சென்றிருந்தவர் அலுவலகத்திற்கு வந்து தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். அவரிடம் வந்திருக்கும் எங்களையும் குழுவினரையும் குறித்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டு வந்த நோக்கம் குறித்து தெரிவிக்கப்பட்டது. பின்னர், திரு.வெங்கடேசன் அவர்களை திரேக சோதனை செய்ய, அவரிடம் பணம் ரூ.210/- இருந்தது. அது குறித்து அவரை விசாரிக்க, அவர் அந்த பணத்தை தன்னுடைய சொந்த செலவிற்காக எடுத்து வந்ததாக சொன்னார். எனவே, அந்த பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர், அவரது செல்போனை வாங்கி Gpay Transaction-ஐ பார்வையிட, அவருடைய பாரத ஸ்டேட் வங்கிக்கணக்கு எண்.30327744345, கைபேசி எண்.9994616166 என காணப்பட்டது. மேற்படி அவருடைய Gpay எண்ணிற்கு "சங்கர் விஜயகோபால்" என்ற பெயரில் இருந்து 23.12.2025 அன்று ரூ.2,500/-, 12.01.2026 அன்று ரூ.2,500/-, 17.02.2026 அன்று ரூ.2,500/-, 27.03.2026 அன்று ரூ.2,500/-, 26.05.2026 அன்று ரூ.4,000/-, ஆக மொத்தம் ரூ.14,000/- வந்துள்ளது. அது குறித்து திரு.வெங்கடேசன், வருவாய் ஆய்வாளர், பொறுப்பு: கணக்காளர் அவர்களிடம் விசாரிக்க, சங்கர் விஜயகோபால் என்பவர் மாண்புமிகு முதல்வரின் காலை உணவுத்திட்ட காண்ட்ராக்டர் என்று சொன்னார். அவர் எதற்காக உங்களுக்கு மாதந்தோறும் பணம் அனுப்புகிறார் என்று கேட்டற்கு, அவருடைய பதில் சந்தேகப்படும்படியாக இருந்தது.

மேலும், இதே அலுவலகத்தில் தற்காலிக அலுவலராக பணிபுரியும் திரு.கார்த்திகேயன், தொழில்நுட்ப உதவியாளர் என்பவருடைய Gpay எண் 7867097044 இருந்து 23.03.2026 அன்று ரூ.6,250/-, 28.04.2026 அன்று ரூ.6,250/-, 26.05.2026 அன்று ரூ.6,250/- மற்றும் 30.06.2026 அன்று ரூ.3,000/- ஆக மொத்தம் ரூ.21,750/- வந்துள்ளது. அவர் எதற்காக உங்களுக்கு மாதந்தோறும் பணம் அனுப்புகிறார் என்று கேட்டற்கு, திரு.வெங்கடேசன், வருவாய் ஆய்வாளர் அவர்களின் பதில் சந்தேகப்படும்படியாக இருந்தது. பின்னர், வருவாய் ஆய்வாளர் அறைக்கு அடுத்த மேலாளர் திரு.இளங்கோவன் என்பவரின் அறை என்றும், அவர் சென்னைக்கு சென்றிருப்பதால் பூட்டியுள்ளது எனவும், நகரமைப்பு அலுவலர் திரு.சூர்யா அவர்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027-ற்குண்டான பயிற்சியாளர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்குண்டான மண்டபம் பார்க்க இளநிலை உதவியாளர் திரு.பரந்தாமன் என்பவருடன் சென்றிருப்பதால் பூட்டியுள்ளது என சொல்லி அந்த அறைகளின் சாவிகளை எடுத்து வரச்சொல்லி அந்த அறைகளில் இருந்த மேஜை இழுவறைகள் மற்றும் பீரோக்களை சோதனை செய்யப்பட்டது. அங்கு பணம் ஏதும் இல்லை. பின்னர், ஹாலில் இருந்த சுகாதார ஆய்வாளர் திரு.தட்சிணாமூர்த்தி அவர்களை சோதனை செய்ய அவருடைய பேண்ட் பாக்கெட்டில் மணிபர்சில் ரூ.880/- இருந்தது. அது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. பின்னர், அவரது மேஜை இழுவறைகள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர், பில் கலெக்டர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியோர்களின் மேஜை, இழுவறைகள் ஆகியவற்றை சோதனை செய்ததில், பணம் ஏதும் இல்லை. பின்னர், அங்கிருந்த நகராட்சி அலுவலர்களான 1) திருமதி.K.கங்கா, அலுவலக உதவியாளர், 2) திருமதி.A.சத்தியப்பரியா, தொழில்நுட்ப உதவியாளர், 3) திரு.M.நந்தகுமார், இளநிலை உதவியாளர், 4) திரு.M.கண்ணன், இளநிலை உதவியாளர், 5) செல்வி.A.ரம்யா, தற்காலிக பணியாளர் (தட்டச்சர்), 6) திரு.A.சரவணன், நகராட்சி குப்பை வண்டி ஓட்டுநர் - ஒப்பந்தத்தொழிலாளர், 7) திரு.E.சங்கர், நகராட்சி குப்பை வண்டி ஓட்டுநர் - ஒப்பந்தத்தொழிலாளர், 8) திரு.V.குமரன், அலுவலக உதவியாளர், 9) திரு.C.ரவி, ஒப்பந்த தூய்மை பணியாளர், 10) திரு.V.மோகன்ராஜ், பரப்புரை மேற்பார்வையாளர் ஆகியோர்களை திரேக சோதனை செய்யப்பட்டு, அதன் விவரங்கள் இருதுறை திடீர் கூட்டுச்சோதனை செயல்முறையில் குறிக்கப்பட்டது. மேலும், அங்கு ஆஜரில் இருந்த 1) திருமதி.A.ஆஷா, வருவாய் உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது, அவரின் கையில் வைத்திருந்த பணம் ரூ.2,000/-க்கும் 2) திருமதி.S.சோபனா, தற்காலிக பணியாளர் - கணபதி சுய உதவிக்குழு என்பவரின் Back Bag-ல் இருந்த பணம் ரூ.2,000/-ம் 3) திரு.V.குமரன், அலுவலக உதவியாளர் என்பவரின் பேன்ட்டின் பின்புற பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.1,300/-ற்க்கு அவர்கள் தக்க முகாந்திரம் கூறாததால்,

அந்த பணம் ஆக மொத்தம் ரூ.5,300/- கைப்பற்றப்பட்டது. பின்னர், ஆதார் பதிவு மையத்தில் இருந்த எல்காட் நிறுவனத்தின் ஒப்பந்த ஊழியர்களையும், அங்கிருந்த பொது மக்களையும், ஆதார் பதிவு மையத்தையும் சோதனை செய்ததில், தக்க முகாந்திரம் கூறாத பணமோ, யாரும் உரிமை கோராத பணமோ கைப்பற்றபடவில்லை. பின்னர், நகராட்சி அலவலக வளாகத்தில் உள்ள வரி வசூல் செய்யும் மையத்தில் இருந்த திரு.ராமு, இளநிலை உதவியாளர் / காசாளர் என்பவரை திரேக சோதனை செய்ய, அவரிடம் பணம் ஏதும் இல்லை. அவரிடம் இன்றைய வரி வசூல் குறித்து விசாரித்து கணினியில் ஒப்பிட்டு பார்க்க அதில் இன்றைய வசூலும், அவரிடம் இருந்த மொத்தத்தொகை ரூ.94,457/- சரியாக இருந்ததால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அங்கு பணம் செலுத்த வந்திருந்த பொதுமக்களை விசாரித்து, விவரங்கள் இருதுறை திடீர் கூட்டுச்சோதனை செயல்முறையில் குறிக்கப்பட்டது. வாலாஜாப்பேட்டை நகராட்சி முதல் தளத்தில் இருந்த கண்ணாடி தடுப்புகளால் ஆன 4 அறைகளில், முதலாவது அறை பூட்டப்பட்டிருந்தது. மீதம் உள்ள 3 அறைகள் நகராட்சி பொறியாளர் பிரிவு என அங்கிருந்த திரு.கார்த்திகேயன், தொழில்நுட்ப உதவியாளர் சொன்னார். பின்னர் அவரை விசாரிக்க முதலாவது அறை நகர மன்ற தலைவர் திருமதி.ஹரிணி தில்லை என்பவருடைய அறை என்றும், அவர் வாரம் ஒருமுறைதான் அலுவலகத்திற்கு வருவார் என்றும், அதற்கு அடுத்து இருந்த அறையானது நகராட்சி பொறியாளர் திருமதி.E.கீதா என்பவருடையது என்றும், அவர் தற்போது மேல்விஷாரம் நகராட்சிக்கும் பொறுப்பு என்பதால் நகராட்சி ஆணையாளருடன் அங்கு சென்றுள்ளார் என்றும் திரு.வெங்கடேசன் சொன்னார். பின்னர், நகராட்சி பிரிவில் இருந்த 1) திரு.லட்சுமணன், பணி மேற்பார்வையாளர், 2) திரு.பில்சன் ஆகாஷ், பணி ஆய்வாளர், 3) திருமதி.அனுபாமா, தட்டச்சர் - கணபதி சுய உதவி குழு மூலமாக தற்காலிக பணியாளர், 4) திரு.கார்த்திகேயன், தொழில்நுட்ப உதவியாளர் -கணபதி சுய உதவி குழு மூலமாக தற்காலிக பணியாளர் ஆகியோர்களை சோதனை செய்யப்பட்டது. அதில், திரு.பில்சன் ஆகாஷ், பணி ஆய்வாளர் என்பவரது பேன்ட்டின் பின்புற பாக்கெட்டில் இருந்த மணிபர்சில் ரூ.7,600/- இருந்தது. அதற்கான முகாந்திரம் கேட்க, அவர் திருமதி.அனுபாமா, தட்டச்சர் என்பவருக்கு தான் ரூ.4700/- Gpay அனுப்பியதாகவும், அந்த பணத்தை அவர் பணமாக கொடுத்ததாகவும் சொன்னார். அவரால் மீதிப்பணத்திற்கு தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே, அந்த பணம் ரூ.2,900/- கைப்பற்றப்பட்டது. பின்னர் இரண்டாவது அறையான நகராட்சி பொறியாளர் அறையானது கதவு மூடப்பட்டு சாவியுடன் காணப்பட்டது. மேற்படி அறையினை ஆஜரில் இருந்த மேற்படி 4 அலுவலர்கள் முன்னிலையில் திறந்து சோதனை செய்யப்பட்டது. அந்த அறையில் கிழக்கு நோக்கி நாற்காலியுடன் பெரிய மேஜை இருந்தது. அந்த மேஜையின் வலதுபுறம் 3 டிராயருடன் ஒரு ரேக்கு காணப்பட்டது. ரேக்கின் இடதுபுறம் இரண்டு

தடுப்புகள் காணப்பட்டது. அதில் ஆவணங்களுக்கு கீழ் தெரியும்படி பணம் இருந்தது. அந்த பணம் குறித்து அங்கு இருந்தவர்களை கேட்க தங்களுக்கு அது குறித்து ஏதும் தெரியாது என்று கூறினர். அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் பணம் ரூ.5,000/- இருந்தது. பின்னர் மூன்றாவது அறைக்கு செல்ல அது பணி மேற்பார்வையாளர் திரு.லட்சுமணன், தொழில்நுட்ப உதவியாளர் திரு.கார்த்திகேயன் மற்றும் பணி ஆய்வாளர் திரு.பில்சன் ஆகாஷ் ஆகியோர் அமரும் அறை என்று தெரிவித்தனர். பின்னர், அந்த அறையில் இருந்த தற்காலிக பணியாளர் திரு.கார்த்திகேயன் என்பவரது செல்போனை வாங்கி Gpay Transaction-ஐ பார்வையிட, அவருடைய பாரத ஸ்டேட் வங்கிக்கணக்கு எண்.33205871234, கைபேசி எண்.7867097044 என காணப்பட்டது. மேற்படி அவருடைய Gpay எண்ணிற்கு "சங்கர் விஜயகோபால்" என்ற பெயரில் இருந்து 21.01.2026 அன்று ரூ.10,000/-, 21.02.2026 அன்று ரூ.10,000/-, 04.04.2026 அன்று ரூ.10,000/-, 29.05.2026 அன்று ரூ.10,000/- ஆக மொத்தம் ரூ.40,000/- வந்துள்ளது. அது குறித்து திரு.கார்த்திகேயன் அவர்களிடம் விசாரிக்க, சங்கர் விஜயகோபால் என்பவர் மாண்புமிகு முதல்வரின் காலை உணவுத்திட்ட காண்ட்ராக்டர் என்று சொன்னார். அவர் எதற்காக உங்களுக்கு மாதந்தோறும் பணம் அனுப்புகிறார் என்று கேட்டற்கு, அவருடைய பதில் சந்தேகப்படும்படி இருந்தது. மேற்படி அறையினை அடுத்து நான்காவது அறையை சோதனை செய்ய அங்கு பணம் ஏதும் இல்லை. பின்னர் மாலை சுமார் 17.40 மணியளவில், நகராட்சி ஆணையாளர் திருமதி.மேகலா அவர்களும், நகராட்சி பொறியாளர் திருமதி.கீதா அவர்களும் நகராட்சி அலுவலகத்திற்கு வந்து இருதுறை கூட்டு சோதனையில் இருந்த எங்களிடம் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டனர். பின்னர் அவர்களிடம் இருதுறை திடீர் கூட்டு சோதனை குழுவினர் வந்துள்ள விவரம் குறித்து தெரிவிக்கப்பட்டது. நகராட்சி ஆணையாளர் திருமதி.மேகலா அவர்களை சோதனை செய்ததில், அவரது ஹேண்ட்பேக்கில் பணம் ரூ.220/- இருந்தது. அந்த பணம் பற்றி கேட்க, அவர் தனது சொந்த செலவிற்காக எடுத்து வந்த பணம் என்று சொன்னதால், அந்த பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும், அவரது அறையை சோதனை செய்ய, பணம் ஏதும் இல்லை. பின்னர் நகராட்சி பொறியாளர் திருமதி.கீதா அவர்களை சோதனை சோதனை செய்ததில் அவரிடம் பணம் ஏதும் இல்லை. பின்னர், திருமதி.கீதா அவர்களிடம் மேற்படி நகராட்சி பொறியியல் பிரிவில் நகராட்சி பொறியாளர் திருமதி.கீதா அவர்களின் அறையில் அவரது இருக்கைக்கு வலதுபுறம் இருந்த ரேக்கில் ஆவணங்களுக்கு அடியில் பணம் ரூ.5,000/- இருந்ததை பற்றி தெரிவித்து அந்த பணத்திற்கான முகாந்திரம் குறித்து விசாரிக்க அவர் அந்த தான் அங்கு வைக்கவில்லை என்றும், அந்த பணம் எப்படி வந்தது என தனக்கு தெரியாது என்றும் தன்னுடைய அறையில் கதவு பூட்டியிருந்தாலும் சாவி அந்த கதவிலேயே இருக்கும் என்றும்

தெரிவித்தார். பின்னர் மேற்படி பணம் ரூ.5,000/- அறையில் இருந்ததா என தனது அலுவலக ஊழியர்களிடம் கேட்டு உறுதி செய்து கொண்டார். அவரோ ஆஜரில் இருந்த மற்ற அலுவலர்களோ அந்த பணத்திற்கு உரிமை கோராததால் மேற்படி பணம் ரூ.5,000/- கைப்பற்றப்பட்டது. பின்னர் நகராட்சி ஆணையர் திருமதி.மேகலா அவர்களிடம் அலுவலக பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் நகரமைப்பு மற்றும் பாூ கணபதி சுய உதவி குழு ஆகிய அலுவலர்களின் வருகை பதிவேடுகளை கேட்டுப் பெற்று, கைப்பற்றப்பட்டது. பின்னர் நகராட்சி ஆணையரிடம் பணியாளர் கையிருப்பு பதிவேடு குறித்து கேட்க அந்த பதிவேட்டை தாங்கள் பராமரிக்கவில்லை என்று சொன்னார். நகராட்சி ஆணையர் திருமதி.மேகலா அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்ட ஒப்பந்ததாரர் திரு.சங்கர் விஜயகோபால் அவர்களுக்கு அளித்த வேலை உத்தரவு நகல் கேட்க அவர் வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.0323/1/2023/இ1 நாள்: 05.06.2023 ஆஜர் செய்தார். அதில் மேற்படி உத்தரவானது சிவானந்த கேட்டரிங் சர்வீஸ் எண்.61, ஏகவள்ளி கோயில் தெரு, திருவலம், இராணிப்பேட்டை மாவட்டம் என இருந்தது. சங்கர் விஜயகோபால் என்பவர் மேற்படி கேட்டரிங் சர்வீஸில் பணிபுரிபவரா அல்லது உரிமையாளரா என சரியாக தெரியவில்லை என்று கூறினார். மேற்படி சான்றொப்பமிட்ட வேலை உத்தரவில் நகல் கைப்பற்றப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது, 03.07.2026 ஆம் தேதியன்று இரவு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இருதுறை திடீர் கூட்டுச்சோதனை செயல்முறையில் நானும், தாங்களும், திருமதி.மேகலா, நகராட்சி ஆணையாளர் மற்றும் திருமதி.கீதா, நகராட்சி பொறியாளர் ஆகியோர் கையொப்பம் செய்தோம். மேற்படி சோதனையின்போது, திருமதி.கீதா, நகராட்சி பொறியாளர் என்பவரது அறையில் இருந்த ரூ.5,000/- ஒப்பந்ததாரரிடமிருந்து வாங்கிய லஞ்சப்பணமாக இருக்கக்கூடும் எனக்கருதி கைப்பற்றப்பட்டது. மேலும், நகராட்சி பணியாளர்களான 1) திரு.P.வெங்கடேசன், வருவாய் ஆய்வாளர் பொறுப்பு கணக்காளர், திரு.கார்த்திகேயன், தொழில்நுட்ப உதவியாளர் ஆகியோர்களின் கைபேசிகளின் மின்னணு பணப்பரிவர்த்தனை பதிவுகள் மற்றும் பிற சூழ்நிலை ஆதாரங்கள் ஆகியவை அவர்கள் ஒப்பந்ததாரர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் லஞ்சமாக பணம் பெற்றிருக்கக்கூடும் என தெரிய வருகிறது. மேற்படி சோதனையின் போது திருமதி.கீதா அவர்களின் அறையில் இருந்த பணம் ரூ.5,000/- மற்றும் தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.8,200/- ஆகமொத்தம் பணம் ரூ.13,200/- கைப்பற்றப்பட்டது. எனவே வாலாஜா நகராட்சியில் பணிபுரியும் 1)திருமதி. E.கீதா, நகராட்சி பொறியாளர், வாலாஜாபேட்டை நகராட்சி, இராணிப்பேட்டை மாவட்டம், 2) திரு.P.வெங்கடேசன், வருவாய் ஆய்வாளர் பொறுப்பு கணக்காளர், வாலாஜாப்பேட்டை நகராட்சி அலுவலகம் மற்றும் 3) திரு.கார்த்திகேயன்,

த/பெ கங்கன், தொழில்நுட்ப உதவியாளர் (கணபதி சுய உதவி குழு மூலமாக தற்காலிக பணியாளர்), வாலாஜா நகராட்சி அலுவலகம் ஆகியோர் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் வாலாஜாப்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் கடந்த 03.07.2026 ஆம் தேதி நடத்திய இருதுறை திடீர் கூட்டுச்சோதனையில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.13,200/-ம், ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டு சோதனை நடவடிக்கைகள் குறித்த செயல்முறை ஆகியவற்றை விசாரணைக்காக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. தங்கள் நம்பிக்கைக்குரிய Sd/-xxxxxxx 6/7/26 (து.ஜெகதீஸ்வரன்)

Sir, Received the complaint on 6.7.2026 at 15.00 hrs and a case in Ranipet V&AC Vigilance and Anti-Corruption Cr.No.04/2026 u/s 7(a), 12 r/w 7(a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 and u/s 106 BNSS was registered on 6.7.2026 at 16.30 hrs. Sd/-xxxxx 6/7/26 Ins. of Police, V&AC, Ranipet.

The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original sent to the Hon'ble Principal District and Sessions Judge/Special Judge, Ranipet and sent the copies to the officers concerned.

6/7/26

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Ranipet.